# குளித்தலை நகராட்சி

2022ஆம் வருடம் மே மாதம் 23ஆம் தேதி திங்கட்க்கிழமை காலை 11.00 மணிக்கு குளித்தலை நகராட்சி நகர்மன்ற கூடத்தில் கீழ்க்கண்ட பொருள்கள்பற்றி முடிவுசெய்ய நகர்மன்ற அவசரக்கூட்டம் நடைபெற உள்ளது. அதுசமயம் தாங்கள் தவறாது கலந்துகொள்ள வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்

நகர்மன்றத் தலைவர்,
குளித்தலை நகராட்சி.

―――――――

பொருள்– 01. அரசாணை(எம்.எஸ்). எண்.52, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (MA-IV) துறை, நாள்–30.03.2022, நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.40032/2012/ஆர்1, நாள்–01.04.2022, குளித்தலை நகர்மன்ற தீர்மானம் எண்.8, நாள்–11.04.2022 மற்றும் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு 81A மற்றும் அட்டவணை 4ல் உள்ள விதிகளில் கூறப்பட்டுள்ள அதிகாரங்களின்கீழ், குளித்தலை நகராட்சி சொத்துவரியினை 01.04.2022 முதல் சீராய்வு செய்யவும், கீழ்க்கண்டவாறு மண்டல அடிப்படை மதிப்பினை மாற்றியமைக்கவும் திட்டமிடப்பட்டு, இது குறித்து பொதுமக்களிடம் ஆட்சேபணைகள் மற்றும் கருத்துக்கள் தெரிவிக்கக்கோரி, தினசரி நாளிதழ்களில் (தினத்தந்தி, தினகரன் மற்றும் Trinity Mirror) 13.04.2022ல் விளம்பரம் செய்யப்பட்டது. மேற்படி விளம்பரங்கள் நாளிதழ்களில் விளம்பரம் செய்யப்பட்டு 30 தினங்கள் (12.05.2022 உடன் முடிவுற்றது) முடிந்த நிலையில் பொதுமக்களிடமிருந்து ஆட்சேபணைகள் மற்றும் கருத்துக்கள் ஏதும் வரப்பெறவில்லை. எனவே, கீழ்க்குறிப்பிட்ட விவரப்படி உள்ள சொத்துவரி மற்றும் காலிமனை வரி, மண்டல மதிப்புகளை உறுதிசெய்ய மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

| வ. எண். | மண்டலம் | புதியதாக நிர்ணயம் செய்யப்படும் மண்டல மதிப்பு | |
|---|---|---|---|
| | | பரப்பளவு சதுரடி | புதிய மண்டல மதிப்பு ரூ.பை. |
| (1) | (2) | (3) | (4) |
| 1) | A | **குடியிருப்பு** | |
| | | 600 சதுர அடி வரை | 0.75 |
| | | 601 முதல் 1200 வரை | 0.90 |
| | | 1201 முதல் 1800 வரை | 1.05 |
| | | 1800 சதுர அடிக்கு மேல் | 1.20 |
| | | **குடியிருப்பு அல்லாத கட்டிடங்கள்** | |
| | | தொழிற் சாலைகள் | 1.05 |
| | | வணிக பயன்பாடு கட்டிடங்கள் | 1.20 |
| | | சுயநிதி கல்வி நிறுவனங்கள் | 1.05 |
| 2) | B | **குடியிருப்பு** | |
| | | 600 சதுர அடி வரை | 0.63 |
| | | 601 முதல் 1200 வரை | 0.75 |
| | | 1201 முதல் 1800 வரை | 0.88 |
| | | 1800 சதுர அடிக்கு மேல் | 1.00 |
| | | **குடியிருப்பு அல்லாத கட்டிடங்கள்** | |
| | | தொழிற் சாலைகள் | 0.88 |
| | | வணிக பயன்பாடு கட்டிடங்கள் | 1.00 |
| | | சுயநிதி கல்வி நிறுவனங்கள் | 0.88 |
| 3) | C | **குடியிருப்பு** | |
| | | 600 சதுர அடி வரை | 0.38 |
| | | 601 முதல் 1200 வரை | 0.45 |
| | | 1201 முதல் 1800 வரை | 0.53 |
| | | 1800 சதுர அடிக்கு மேல் | 0.60 |
| | | **குடியிருப்பு அல்லாத கட்டிடங்கள்** | |
| | | தொழிற் சாலைகள் | 0.53 |
| | | வணிக பயன்பாடு கட்டிடங்கள் | 0.60 |
| | | சுயநிதி கல்வி நிறுவனங்கள் | 0.53 |

..2..

**காலிமனை வரி சீராய்வு:**

காலிமனை வரிவிதிப்பிற்கு, 1 சதுர அடி நிலத்திற்கு தற்போதுள்ள அடிப்படை மதிப்பு 100 சதவீதம் உயர்வு செய்து காலிமனை வரி பொது சீராய்வு செய்யப்பட வேண்டும். மேலும், சொத்து வரிவிதிப்பு செய்யும் போது கட்டடத்தின் பரப்பளவிற்கு இரண்டு மடங்கிற்கு மேல் உள்ள காலியிடத்திற்கு சொத்து வரியுடன் சேர்த்து காலிமனை வரி வரிவிதிப்பு செய்யப்பட வேண்டும்.

இந்நகராட்சியில் காலிமனை வரி விதிப்புக்கு கீழ்க்கண்ட விபரப்படி மூன்று மண்டலங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

| வ. எண். | மண்டல விபரம் | மண்டல மதிப்பு (ரூ.பை.) |
|---|---|---|
| 1 | Arterial Road | 0.20 |
| 2 | Main Road | 0.15 |
| 3 | Residential Area | 0.10 |

மேற்கண்ட விபரப்படி குறிப்பிடப்பட்டுள்ள காலிவரிக்கான மண்டலங்களில் கீழ்க்குறிப்பிடப்பட்டவாறு திருத்தம் செய்து ஒப்புதல் வேண்டப்படுகிறது.

| வ. எண். | மண்டல (Zone) விபரம் | மண்டல மதிப்பு (ரூ.பை.) |
|---|---|---|
| 1 | A | 0.40 |
| 2 | B | 0.30 |
| 3 | C | 0.20 |

**தன்னிச்சையான வருடாந்திர சொத்துவரி சீராய்வு:**

1. 600 சதுரஅடிக்கும் குறைவான பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 25% சொத்துவரி உயர்வு செய்யலாம்.
2. 601 முதல் 1200 சதுரஅடி வரை பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 50% சொத்துவரி உயர்வு செய்யலாம்.
3. 1201 முதல் 1800 சதுரடி வரை பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 75% சொத்துவரி உயர்வு செய்யலாம்.
4. 1800 சதுர அடிக்கு அதிகமாக பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 100% சொத்துவரி உயர்வு செய்யலாம்.
5. வணிகப் பயன்பாட்டுக் கட்டடங்களுக்கு தற்போதுள்ள சொத்து வரியில் 100% சொத்துவரி உயர்வு செய்யலாம்.
6. தொழிற்சாலை பயன்பாட்டு கட்டடம் மற்றும் சுய நிதி பள்ளி மற்றும் கல்லூரி கட்டடங்களுக்கு தற்போதுள்ள சொத்துவரியில் 75% சொத்துவரி உயர்வு செய்யலாம்.
7. காலிமனை வரிவிதிப்பிற்கு, 1 சதுர அடி நிலத்திற்கு தற்போதுள்ள அடிப்படை மதிப்பு 100 சதவீதம் உயர்வு செய்து காலிமனை வரி பொது சீராய்வு செய்யலாம்.
8. ஏற்கனவே உள்ள சொத்துவரி / காலிமனைவரியில், ஆண்டுதோறும் 6 % உயர்வு அல்லது கடந்த 5 ஆண்டுகளின் மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தியின் (GSDP) சராசரி வளர்ச்சி வீதம் இவற்றில் எது அதிகமோ அதன் அடிப்படையில் ஒவ்வொரு ஆண்டும் சொத்துவரி / காலிமனை வரி உயர்வு செய்து சொத்துவரி சீராய்வு செய்யலாம்.

**Rate of Taxation**

**மொத்த ஆண்டு மதிப்பில் சொத்துவரி விகிதம்**

| | | |
|---|---|---|
| சொத்துவரி அடிப்படை மதிப்பில் | = | 13.50 % |
| கல்வி வரி | = | 2.50 % |
| | | 16.00 % |
| நூலக வரி (சொத்துவரி அடிப்படை மதிப்பில்) | = | 10 % |

**மேற்குறிப்பிட்ட கணக்கீட்டிற்கு கணக்குத் தலைப்புகளுக்கான பயன்பாடு**

| | | |
|---|---|---|
| பொதுப் பயன்பாட்டிற்கு | = | 9.00 % |
| குடிநீர் மற்றும் வடிகால் பயன்பாட்டிற்கு | = | 4.50 % |
| கல்வி வரி | = | 2.50 % |
| | | 16.00 % |
| நூலக வரி (சொத்துவரி அடிப்படை மதிப்பில்) | = | 10 % |

மேற்கண்ட விபரப்படி 01.04.2022 முதல் சொத்துவரி மற்றும் காலிமனை வரி சீராய்வு மேற்கொள்ள மண்டல அடிப்படை மதிப்பினை உறுதிசெய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– 1). மன்றம் அனுமதிக்கலாம்.

2). அரசாணை(எம்.எஸ்). எண்.52, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (MA-IV) துறை, நாள்– 30.03.2022, நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.40032/2012/ஆர்1, நாள்–01.04.2022, குளித்தலை நகர்மன்ற தீர்மானம் எண்.8, நாள்–11.04.2022 மற்றும் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு 81A மற்றும் அட்டவணை 4ல் உள்ள விதிகளில் கூறப்பட்டுள்ள அதிகாரங்களின்கீழ், குளித்தலை நகராட்சி சொத்துவரி மற்றும் காலிமனை வரியினை 01.04.2022 முதல் சீரராய்வு செய்ய அனுமதிக்கலாம்.

3). Rate of Taxation, நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் வழிகாட்டுதலின்படி நிர்ணயிக்கலாம்.

4). மேற்கண்ட விபரத்தினை மாவட்ட அரசிதழில் பிரசுரம் செய்யவும், தேவையான படிவங்கள் கூட்டுறவு அச்சகத்தில் கொள்முதல் செய்துகொள்ளவும், அதற்கான செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

*******

## குளித்தலை நகராட்சி

### குளித்தலை நகர்மன்றத்தின் 23.05.2022ஆம் தேதிய அவசரக் கூட்டத்தின் உண்மைநகல்

| வ. எண். | பொருள் எண். | தீர்மானம் எண். | தீர்மான விபரம் |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1 | 1 | 51 | 1. அனுமதிக்கப்பட்டது.<br>2. அரசாணையின்படி 1.4.2022 முதல் சொத்துவரி மற்றும் காலிமனை வரி சீராய்வு செய்ய அனுமதிக்கப்பட்டது.<br>3. சொத்துவரி மற்றும் காலிமனை வரிகளுக்கான மண்டல அடிப்படை மதிப்புகளுக்கு ஒப்புதல் வழங்கப்பட்டது.<br>4.செலவினங்களுக்கு மன்றம் அனுமதிக்கப்பட்டது. |

ஒம்/–P.சகுந்தலா,
நகர்மன்றத் தலைவர்,
குளித்தலை நகராட்சி.

/ உண்மை நகல் /

ஆணையர்,
குளித்தலை நகராட்சி.